**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாட்டுப்புறப்பாடல் வகைகளுள் எவையேனும் நான்கினை எழுதுக.
2. நாட்டுப்புறக்கதைப் பாடல்களின் பகுதிகளைக் குறிப்பிடுக.
3. விடுகதையின் வகைகளைக் குறிப்பிடுக.
4. நாட்டுப்புற மக்களின் விளையாட்டு வகைகளைக் குறிப்பிடுக.
5. நாட்டுப்புறவியலுக்கும் வரலாற்றுக்கும் பொதுவானது எது?
6. நாட்டுப்புறவியல் கோட்பாடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.
7. தமிழில் தோன்றிய முதல் அம்மானைப் பாடல் எது?
8. ஏணியேற்றம் கதைப்பாடலின் நாயகன் யார்?
9. சகுனம் என்றால் என்ன?

10. பிசி என்னும் சொல்லின் பொருள் யாது?
11. தமிழில் பழமொழி இலக்கியத்திற்கு முதன்முதலாக வரையறை தந்தவர் யார்?
12. பெரிய கும்பிடு என்பதன் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
13. சிறுவர் விளையாட்டின் செயல்களை எழுதுக.
14. மரப்பாச்சி என்பதன் பொருள் என்ன?
15. வீணையின் இருவகைகளைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. நாட்டுப்புறக் கலைகளின் ஆட்டங்களைக் குறிப்பிடுக.
2. நாட்டுப்புறக் கதைகளின் சிறப்புக்கூறுகளை எழுதுக.
3. நாட்டுப்புற இயற்கை மருத்துவம் குறித்து எழுதுக.
4. தரவுகளின் வகைகளை குறிப்பிடுக.
5. புராணக் கதைப்பாடல்களின் வாழ்வியல் முறைகளைக் குறிப்பிடுக.
6. உடற்பயிற்சி விளையாட்டுப் பாடல்கள் குறித்து எழுதுக.
7. சிறுதெய்வம் – பெருந்தெய்வம் வேறுபாடு வரைக.
8. மகளிர் அக விளையாட்டுகள் குறித்தெழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) நாட்டுப்புறப் பாடல் வகைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சமூகவியல் அடிப்படையில் அமைந்துள்ள நாட்டுப்புறவியலின் கூறுகளை விளக்கி உரைக்க.

2. (அ) நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தேசிங்கு ராசன் கதைச்சுருக்கத்தினை எழுதுக.

3. (அ) நாட்டுப்புற தெய்வ வழிபாடு குறித்து கட்டுரை வரைக.

**(அல்லது)**

(ஆ) நாட்டுப்புற மருத்துவத்தின் வகைப்பாட்டினை விளக்கி உரைக்க.